# சித்தர் நெறி

மெய்ஞ்ஞானக்கொடி மெய்ஞ்ஞானக்கொடி

சீவநெறி => சிவநெறி => சைவநெறி => மெய்யான இந்துமதம்

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
## அவர்கள் அருளியவை



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

**வைகாசி மாத வெளியீடு (May-June 2013)**
**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114**

## ஞானக்காட்சி, அருட்கணிப்பு, ... முதலியன பற்றி சித்தர் கருவூரார் தரும் விளக்கங்கள்

**காணிக்கை ரூ.4/-**

# உள்ளுறை

*இந்த இதழில் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்* தம்மிடம் அருட்கணிப்பு பெற்ற ஒரு பெண்ணின் ஐயங்களுக்கு வழங்கிய விளக்கங்களை வழங்குகின்றோம். இந்த விளக்கங்களை குருதேவர் உரையாடலாகப் பேசிட ஒலி நாடாவில் பதிவு செய்யப் பட்டது. எப்பொழுதும் போல் குருதேவர் தனிப்பட்ட ஒருவருக்காக வழங்கிடும் விளக்கங்கள் அனைவருக்கும் பொதுவானது என்று குருதேவரே அறிவித்திடுவது போல் இந்த விளக்க உரையிலும் கூறப் பட்டிருப்பதால் இதனை வெளியிடுகின்றோம்.

**1. ஞானக்காட்சி பற்றிய விரிவான விளக்கம்.**

**2. பெயரியல் என்ற கலையைப் பயன்படுத்தும் விதம்.**

**3. குருதேவர் என்பவர் யார் என்பதன் விளக்கம்.**

**4. தாலியோகம் செயல்படுத்தும் விதம்.**

**5 பங்காரு அடிகளார் இயக்கமும் குருதேவரின் இந்து மறுமலர்ச்சி இயக்கமும் எப்படி வேறுபடுகின்றன என்ற விளக்கம்.**

**6. பலி கொடுப்பது பாவமா? என்பதன் விளக்கம்.**

# அருளுலகச் செல்லமகளுக்கு வழங்கப்பட்ட விளக்கங்கள்

சென்னை-11
22.6.1987

பெறுனர்:

குமாரி இரசினி ஓம்
மதுரை-625010

1) *அருளுலகச் செல்ல மகளே! செல்வ மகளே!* என்று இன்று அருளாட்சி நிகழ்த்த வருகின்ற தேவதேவி உன்னை அழைக்கின்றாள். நீ அருளுலகச் '*செல்வ மகள்*' என்ற விருப்பத்தோடும், நோக்கத்தோடும் உனக்கு அருட்கணிப்பு வழங்கப் பட்டது. ஆனால், அது முழுமையும் நிறைவேற முடியாமல் நீ அருளுலகத்தில் '*செல்ல மகளா*'க இருப்பதாக தேவதேவி அறிவிக்கிறாள். இந்த '*செல்ல மகள்*', '*செல்வமகள்*' என்கின்ற இரு சொற்களின் பொருளாழத்தை நீ புரிந்து கொள்வது நல்லது. இதற்குப் பிறகு உன்னுடைய ஐயங்களையும் அவற்றிற்கான பதிலையும் காண்போம்.

2) உன்னைப் பற்றிய ஐயங்களிலே முதலாவதாக உனக்குரிய கணவன், அதாவது மாப்பிள்ளை உன்னோடு உனது வீட்டில் வாழக் கூடிய வீட்டு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்பதுதான் அருட்கணிப்பு. அந்த அருட்கணிப்பு உனது பெற்றோர்களின் முன்னிலையில் கூறப்பட்டது. படித்த பெண்ணாகிய உனக்கும் அது அறிவிக்கப் பட்டது. அந்த அருட்கணிப்பினை நீங்கள் உள்ளத்தில் கொண்டு அதற்கேற்றபடிதான் மாப்பிள்ளை பார்த்திருக்க வேண்டும். அல்லது நான்கு ஆண்டுகள் அதாவது 48 மாதங்கள் உங்கள் இல்லத்தில் தங்கியிருந்து கொண்டு; பிறகு சென்று அவரது விருப்பம் போல் தனியாகச் சென்று தொழில் நடத்தலாம், குடும்பம் நடத்தலாம் என்றாவது சொல்லியிருக்க வேண்டும். அதை நீங்கள் செய்ய முயற்சி யெடுக்கவில்லை. எனவே, இந்தத் தவறு நிகழ்த்தப் பட்டதோ அல்லது எதிர்பாராமல் நிகழ்ந்ததோ, அது உங்களால்தான். அதற்கு எப்படியும் பீடாதிபதியோ, குருதேவரோ,

இந்து மறுமலர்ச்சி இயக்கமோ பொறுப்பாக முடியாது. அருட்கணிப்பை நாங்கள் சொல்கிறோம் என்றால் அதை ஏற்றுப் புரிந்து நீங்கள்தான் செயலாக்க வேண்டும். இப்பொழுது, பார்த்திருக்கின்ற மாப்பிள்ளை வீட்டு மாப்பிள்ளையாக வருவாரா? இல்லையா? என்பதைப் பற்றி தெரியவில்லை. அவர் வந்தால் சிறப்பாக இருக்கும்; வராவிட்டால் அவ்வளவு தூரம் சிறப்பாக இருக்க முடியாது என்ற அளவோடுதான் நாங்கள் எங்களுடைய அருட்கணிப்பை, எங்களுடைய கருத்தைச் சொல்லிக் கொள்ள முடியும்.

## ஞானக்காட்சி பற்றிய விரிவான விளக்கம்

3) அடுத்தாற்போல ஞானக்காட்சியைக் காணக்கூடிய அருளாற்றல் உனக்கிருக்கின்ற காரணத்தால்தான் உன்னை **அருளுலகத்தின் செல்வமகள்** என்று அறிவிக்கின்றோம். ஏனென்றால், இந்த மண்ணுலகில் சில இடங்களில்தான் தங்கம் கிடைக்கின்றது என்பது போல; சில இடங்களில்தான் பெட்ரோல் கிடைக்கின்றது. சில இடங்களில்தான் செம்பு போன்ற உலோகங்கள் கிடைக்கின்றன; சில இடங்களில்தான் அரிய உலோகத் தாதுக்கள் கிடைக்கின்றன. அதுபோல, மனிதர்களிலே சிலரிடம்தான் ஞானக்காட்சி காணக்கூடிய ஆற்றல் இருக்கின்றது. அந்த ஆற்றலை ஓர் அரிய பெரிய செல்வமாகவே கருதுகிறார்கள் சித்தர்கள். அந்த செல்வத்தைப் பெற்றிருப்பவர்கள் செல்வமகன்கள், செல்வ மகள்கள் என்றே அழைக்கப் படுகின்றார்கள்.

இந்தச் செல்வம் ஆற்றினிடையே உள்ள மேடு பள்ளம் போல திடீர் திடீரென்று ஒருவருடைய வாழ்க்கையில் உச்ச நிலையை அடைவதும், பிறகு அந்த நிலையினை விட்டு அந்த நிலையே இல்லாமல் எதுவுமே புரியாத வெறுமை நிலை வரும் தன்மையை அடைவதும் உண்டு. அதாவது ஆற்று நீர் ஓடிக் கொண்டிருக்கையில் சில புதிய மேடுகள் வெள்ளம் வந்ததும் தோன்றுவதும்; ஏற்கனவே மேடு இருந்த இடத்தில் பெரிய பள்ளம் தோன்றுவதும்; அடுத்த வெள்ளத்தில் அந்த மேடு பள்ளமாகும், பள்ளம் மேடாகும் என்பது போல மனித வாழ்க்கையில் குறிப்பிட்ட காலங்களிலே ஞானச் செல்வத்தைப் பெற்றவர்கள் அதை இழப்பதும், பிறகு மீண்டும் பெறுவதுமாக இருப்பார்கள்.

ஆனால், தக்க குருவைத் தங்களுக்குள் பெற்று அந்த குருவுக்குள் தங்களையும் நிலைநிறுத்திக் கொண்டு உலகியல் கடந்த சித்தி நிலைகளைப் பெற்று விடுகிறார்கள் என்றால்; அதற்குப் பிறகு அந்த நிலை ஏற்படுவதில்லை. அதற்கு மலைபோன்ற அருளாளர்கள் என்று சொல்வார்கள், மலை என்றும் நிலையாக நிலைத்து நிற்கும். அது எவ்வளவுதான் வெட்டிக் கரைத்தாலும், கரையாது.

அதுபோன்ற அருளாளர்கள், ஞானச் செல்வர்கள், அதாவது அருட்செல்வர்கள் - அருளுலக சொத்தைப் பெற்றவர்கள், ஞானக்காட்சி காணுபவர்கள், ஞானக்காட்சி பிறருக்கு வழங்குபவர்கள், அருள் வழங்குபவர்கள், அருட்கணிப்புச் செய்பவர்கள் என்றிருப்பவர்கள் எல்லோருமே ஞானத்தின் செல்வர்கள்தான். அதுபோலத் தாங்கள் அருளுலகத்தின் *செல்வமகளாக* அறிமுகமாயிருக்கிறீர்கள். இந்தச் *செல்வமகள்* என்ற நிலை நீடிப்பதற்காகவே தங்களுடைய கணவர் தங்களுடைய தாய் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று அருட்கணிப்புக் கூறப்பட்டது. அந்த அருட்கணிப்பு முழுமையாக நிறைவேற்றா விட்டாலும், நிறைவேற்றுவதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கின்றது. அந்த வாய்ப்பை நிறைவேற்றினால்தான் தாங்கள் அருளுலகத்தின் *செல்வமகளாக* இருக்க முடியும். அப்படி இல்லையென்றால் *செல்ல மகளாக* இருக்கலாம். அதாவது அருளுலகத்தின் செல்லமகள் என்று பாராட்டப்படுகின்ற தாங்கள் ஒருகாலத்தில் செல்வமகளாக இருந்தீர்கள் என்ற நிலையில் மீண்டும் அந்த செல்வ மகள் என்ற நிலை எப்பொழுது கிடைக்கும் என்று சொல்ல முடியாது.

எனவே, ஒவ்வொருவரும் தங்களுடைய முயற்சியினாலும், ஊழ்வினையாலும், வினையாலும், விதியாலும் எதிர்பாராத சித்திகளால் பெற்றிடக் கூடிய அருளுலகச் செல்வங்கள் இருந்தாலும், அருளை எப்படித் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வது?, அருளை எப்படிப் பயிராக்கிக் கொள்வது? அல்லது காத்துக் கொள்வது? என்பதையெல்லாம் குருவின் வழியாகத்தான் முறையாகக் கற்றுக் கொள்ள வேண்டும். குருவினால்தான் அவற்றைக் காப்பாற்றித் தரமுடியும். அதனால்தான்,

'குருவில்லாத வித்தை பாழ்',

'குரு தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வாராது',
'குருவே அனைத்திற்கும் கரு',
'குருவும் திருவும் ஒன்றே', 'குருவே எல்லாம்',
'குருவே அனைத்தும் ஆகின்றார்'

என்பன போன்ற எண்ணற்ற வாசகங்களை எல்லாம் குருபாரம்பரியத்தில் நிறைய சொல்லியிருக்கிறார்கள். எனவே, உங்களுக்கு கிடைத்திருக்கக் கூடிய இந்த ஞானக்காட்சி காணுகின்றது என்பது ஓர் அருளுலகச் செல்வம்; நீங்கள் அருளுலகச் செல்வமகள் என்று அழைக்கப் படுகிறீர்கள்.

**ஞானக்காட்சி உண்மையா?**

4) அடுத்தாற்போல் நீங்கள் இந்த ஞானக்காட்சியில் உங்களுக்கு ஐயம் வருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். உண்மையிலேயே ஞானக்காட்சி காணுகின்றேனா? அல்லது கற்பனையா? என்று கேட்டிருக்கிறீர்கள். அந்த மயக்கம் ஆரம்ப நிலையில் அப்படித்தான் இருக்கும். அதை அநுபவப் பூர்வமாக நீங்கள் பார்த்துக் கொண்டு போகப் போகத்தான் அதை உங்களால் நம்ப முடியும். ஏனென்றால், அநுபவம்தான் ஒருவரைச் சரியாக்கும், 'Experience makes a man perfect'. அதுபோல், அருளுலகத்தில் எதுவுமே கற்பனையல்ல, பொய்யல்ல, கனவல்ல. எல்லாமே நனவுதான், உண்மைதான், சரியானதுதான். அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், புரிந்து கொள்ள வேண்டுமென்றால்; பலமுறை ஞானக்காட்சி காண வேண்டும்.

இந்த ஞானக்காட்சியை காணுகின்ற ஆற்றலை வளர்த்துக் கொள்ளுகின்ற முறை, அந்தக் கலையை வளர்த்துக் கொள்ளுகின்ற முறை, அந்தக் கலையைப் பற்றிய முறையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கலையை எடுத்துக் கொண்டால் எப்படி திரைப்படம் காட்டுகின்ற பெரிய இயந்திரம் இருக்கின்றதோ அதுபோல ஒரு மனிதருடைய உடலும் பெரிய இயந்திரம். அந்த இயந்திரம் இந்த ஞானக்காட்சியைக் காணச் செய்கிறது என்கிற போது அந்த இயந்திரம் பழுதுபடாமல் இருக்க வேண்டும். அதற்கு அந்த இயந்திரம் எப்படி யெப்படி யெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையிருக்கிறது. அதுபோல், நீங்கள் உடலைப் பேணுவது எப்படி? ஆவியைப் பேணுவது எப்படி? ஆருயிரைப் பேணுவது எப்படி? ஆன்மாவைப் பேணுவது எப்படி?

என்பதை யெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதோடு இந்த திரைப்படம் காட்டுகின்ற இயந்திரம் இயக்குவதற்கு மின்சார சத்தி என்ற ஒன்று தேவை. அந்த மின்சார சத்தி நேரடியாகக் கிடைத்தாலும் சரி, பெரிய பெரிய செனரேட்டர்கள் (Generators) வைத்திருந்து அதன்மூலம் கிடைத்தாலும் சரி, எப்படியாயினும் அந்தச் சத்தி தேவை. அந்தச் சத்தியை வழங்கக் கூடியவர்கள்தான் குருதேவர். அல்லது பெரிய பெரிய ஆலயங்கள் அல்லது கருவறைகளில் வாழக் கூடிய குலதெய்வங்கள், தேவர்கள், தேவதைகள் என்று சொல்லக் கூடியவர்கள். இந்த ஞானக்காட்சி என்பது எப்போது வேண்டுமானாலும் மறையலாம் அல்லது குறையலாம். இந்த ஞானக்காட்சி சிலருக்குத்தான் கிடைக்கும். அப்படிக் கிடைக்கப் பெற்றவர்கள் தெய்வீகச் சத்தி உடைய Superman என்று சொல்லலாம். சாதாரண மனிதர்களை விட உயர்ந்தவர்கள். தெய்வீக சத்தி பெற்ற அருளாளர்கள் என்று பெயர்.

**ஞானக்காட்சிக்கு அருட்சத்தி தேவை**

இந்தச் சத்தி எப்படிக் கிடைக்கிறது என்றால், முன்வினைப் பயனால் கிடைக்கும்; பிறந்த நேரம், நட்சத்திரம், ... என்று எல்லாம் சொல்லப்படும் நாள், மீன், கோள் இவைகளுக்கேற்பவும் கிடைக்கும்; குருவருளாலேயும் கிடைக்கும்; அவரவர்களுடைய சாமுத்திரிகா இலட்சணம் எனப்படும் அங்கவியல்படியும் கிடைக்கும். இப்படி யெல்லாம் காரணங்கள் உண்டு. இவை இப்படி இருக்கக் கூடியவர்கள் அதைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது.

ஞானக்காட்சி கிடைப்பவர்கள் அதைத் தெரிந்து பயன்படுத்த வேண்டும். அதாவது குருடன் ஒருவன் வழி தெரியாமல் தடுமாறும் போது மற்றவர்கள் அவனைக் கையைப் பிடித்துக் கூட்டிச் செல்வது போல், ஞானக்காட்சி காண்பவர்கள் பிறருக்கு வரக்கூடியவைகளைப் பற்றி ஞானக்காட்சியில் கண்டு ‘உனக்கு வரப்போகும் இலாபங்கள், நட்டங்கள் இன்னின்னவை; அதற்கேற்ப நீ தெரிந்து கொள்’ என்று வழிகாட்டலாம். உதாரணமாக வந்திருப்பவர்களுக்கு உடல் மனப் பாதிப்பு இருந்து, அவர்கள் அதை நோய் என்று நினைத்துக் கொண்டு குணப்படுத்தியும், குணம் ஆகாமலிருக்கையில் அது பேயாக இருந்தால் பேய் என்று

அறிவுறுத்தலாம். அதேபோல், தவருகப் பேயினுல் பாதிப்பு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அது வெறும் நோயாக இருந்தால்,

**ஞானக்காட்சியை பயன்படுத்தும் விதம்**

நோய் என்று கூறி வழி நடத்தலாம். அல்லது நாள், கோள், மீன் பாதிப்பு என்றிருந்தால் கூறலாம்; கண்ணேறு என்றிருந்தால் கண்டுபிடித்துச் சொல்லலாம். அதாவது, சாதாரண மனிதக் கண்ணுக்குத் தெரியாமல் Supernatural ஆக என்னென்ன பாதிப்புகள் இருக்கின்றனவோ அதைப் பார்த்துச் சொல்ல ஞானக்காட்சி பயன்படும். அதேபோல், திருடு, களவு, கொள்ளை போன்றவையும் ஞானக்காட்சி மூலம் கண்டுபிடிக்க முடியும். **ஆனுல், இவற்றை [திருடு, களவு, கொள்ளை] மட்டும், [ஞானக் காட்சியில்] தெரிந்தாலும் வெளியே சொல்லக் கூடாது என்று தடை விதிக்கப் படுகிறது அருளுலகத்தில்**.

மேலும், ஞானக்காட்சி காண்பவர்கள் ஞானக்காட்சி மூலம் கோயில்களில் ஆற்றல் உள்ளதா, இல்லையா; மந்திறவாதிகள் தவறு செய்திருக்கிருர்களா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்கலாம். அதே மாதிரி தன்னுடைய குடும்பத்திற்கே என்ன செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த ஞானக்காட்சியைப் பயன்படுத்தி எல்லாக் காரியமும் செய்ய வேண்டும். **ஞானக்காட்சி என்பது தெய்வ தரிசனம்**. ஞானக்காட்சி என்பதில் தெய்வங்களைப் பார்க்கலாம், பேசலாம். அது ஒரு பெரிய சித்தி கிடையாது. அதாவது அவர்களுடைய குல தெய்வம் யார் என்று பெயர் கேட்டு அந்தத் தெய்வத்தைப் பார்த்தால் அது அத் தெய்வத்தையே சித்தி செய்து விட்டதாகப் பொருளில்லை. தெய்வம் நேரில் தோன்றி காட்சி கொடுப்பது வேறு, ஞானக்காட்சியில் காண்பது வேறு. ஞானக்காட்சியில் நீங்கள்தான் காண்கின்றீர்கள். தெய்வத்தின் அனுமதி யில்லாமல் அதனைக் கூப்பிட்டுக் கேள்விகள் கேட்கிருர்கள். அப்படிக் கேட்கும் போது அந்தத் தெய்வங்கள் பதில் சொல்கின்றன. ஏனென்றுல், நம்மை அடையாளம் கண்டு கொண்டு பார்க்கிருர்கள். ஞானக்காட்சி காணும் ஆற்றல் இவனுக்கு இருக்கிறது என்று புரிந்து கொண்டு அத்தெய்வங்கள் பதில் சொல்லும். அவ்வளவுதான். ஆனுல், தெய்வம் சித்தியாகி விட்டது என்பதல்ல இதன் பொருள். ஞானக்காட்சி உள்ளவர்கள் அருளாற்றல் பெற்று தெய்வங்களைக் காண்கின்றுர்கள்.

எப்படி தொலைநோக்கி (Telescope) மூலம் மனிதன் வானத்தில் வெகு தூரத்திலுள்ள நட்சத்திரங்களைக் காணுகின்றானோ அது போன்றது இது. எனவே, ஞானக்காட்சி என்பது ஒரு தெய்வ தரிசனம்தான். இதில் சந்தேகம் இல்லை. உங்களுக்கு இதில் இனியும் சந்தேகம் இருக்கக் கூடாது.

எனவே, நீங்கள் அடிக்கடி ஞானக்காட்சி கண்டு யார் யார் வருகிறார்கள், பேசுகிறார்கள் என்பதை யெல்லாம் உங்களுக்கு நீங்களே பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். எப்படி சைக்கிள் ஓட்டிப் பழகிக் கொள்ள வேண்டுமோ, துப்பாக்கியைச் சுட்டுப் பழகிக் கொள்ள வேண்டுமோ, கத்தி வீசிப் பழகிக் கொள்ள வேண்டுமோ, அதுபோல; ‘சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்’ என்பது போலத் தாங்கள் பயிற்சி செய்ய வேண்டும். பயிற்சி மட்டுமல்ல, அதற்கேற்ற முயற்சியும் இருக்க வேண்டும். அருள் யோகம் இருக்கிறது என்னும்போது, குருதேவர் என்ற நிலையில் உள்ளவர்கள் ஞானக்காட்சி என்னும் ஆற்றலைக் கொடுத்து அதனைப் பயன்படுத்தி உலகுக்கு நன்மை செய்யக் கூறுவார்கள்.

இது எப்படி? என்றால்; அரேபிய நாட்டில் மண்ணெண்ணெய் கிடைக்கிறது என்றாலும் அதை அமெரிக்கர்கள் சென்று அறிவியலைப் பயன்படுத்திப் பெரிய பெரிய இயந்திரங்களை நிறுவி பூமிக்கு அடியிலிருக்கும் அந்த எண்ணெயை வெளிக் கொணர்ந்து சுத்திகரிப்பு செய்து உலகத்திற்குப் பயன்படும் பெட்ரோலையும் பிற பொருட்களையும் தயாரித்தார்கள்; அந்த நாட்டில் எண்ணெய் இருந்தது என்பதற்காக அரேபியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கு தந்து விட்டு அமெரிக்கர்கள் தங்களுக்கும் இலாபம் சேர்த்துக் கொள்வது போல ஞானக்காட்சி காணும் ஆற்றல் உடையவர்களைத் தயாரித்து வருவதால் குருதேவர் சில வழக்குகளை அவர்களிடம் கொடுத்து ஞானக்காட்சி மூலம் கணிக்கச் சொல்லிப் பயன்படுத்துவார்கள். இதுபோலத் தங்களுக்கும் பயன்படும் என்பதால் குருநிலையில் உள்ளவர்கள் ஞானக்காட்சி காண்பவர்களுக்கு மேன்மேலும் ஆற்றலை வழங்கி அவர்களை அருளுலகத்தில் இன்னின்ன கோயிலுக்கு நன்மை செய்யுங்கள், அல்லது இந்த வழக்குகளைப் பார்த்துச் சொல்லுங்கள் என்று கூறி அவர்களை அருளுலகுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்;

அதனை அருளாட்சிக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; எல்லா மக்களுக்கும் நன்மை செய்ய விரும்புகிறார்கள்.

பெட்ரோலை எடுத்து எப்படிப் பயன்படுத்துகிறோமோ, அதுபோல் அருளாற்றல் உள்ளவர்களிடம் உள்ள ஆற்றலைப் பயன் படுத்துவதற்காகத்தான் குருதேவர் இருக்கிறார். எனவே, ஞானக்காட்சி பற்றி இவ்வளவுதான் விளக்கம். நீங்கள் காண்பது ஞானக்காட்சிதான், தெய்வதரிசனம்தான். தெய்வத்தோடு பேசுவதுதான். இது கற்பனையல்ல. தங்களுக்கு இது ஊழ்வினையால் கிடைத்திருக்கிறது. அதை நீங்கள் விரும்பினால், அதிகமாக்கிக் கொள்ளலாம். இல்லையென்றால் விட்டு விடலாம். நிலத்தடியில் உள்ள பெட்ரோலை எடுத்தால் எடுக்கலாம், எடுக்கா விட்டாலும் அது உள்ளே அப்படியேதான் இருக்கும். அதுபோலத் தங்களிடம் உள்ள ஆற்றலைப் பயன்படுத்திடலாம்.

## பெயரியல் கலையைப் பயன்படுத்தும் விதம்

**இந்துமதம் ஒரு சுருக்க விளக்கம்**

5) சித்தர்கள் மொழி தமிழ்மொழிதான். இவர்கள் விண்வெளியிலிருந்து வந்தவர்கள். Astronauts போன்றவர்கள். இதுபோல் மண்ணுலகம் தோன்றத் தோன்ற அந்தந்த உலகங்களுக்கெல்லாம் சென்று அந்த உலகத்தின் ஆரம்பத்தில் உண்டாகக் கூடிய பயிரினங்கள் உயிரினங்களை யெல்லாம் பாதுகாத்தும் வளர்த்தும் பயன்படுத்துகிறவர்கள் சித்தர்கள். அப்போது அவர்கள் அந்த மக்களுக்கு உருவாக்கித் தரும் அறிவியல் Science அதாவது Social Science, Political Science போன்றவைகளுக்கெல்லாம் சேர்ந்த ஒட்டுமொத்தமான பெயர்தான் 'இந்து மதம்' (It is the Mother Liquor for All Arts and Sciences). இந்துமதம் என்பது எல்லாவித அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் தாய் ஆகும். அதைத் தவிர வேறு எந்த விளக்கமும் தரமுடியாது. இந்துமதம் என்பது மடமையாகவோ, பயனற்றது என்றோ, தேவையற்றது என்றோ சொல்ல முடியாது. அது பயனுடையது. அறிவியல் பூர்வமானதுதான் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பதினெண்சித்தர்கள் இந்த இந்துமதத்தைத் தமிழ்மொழியில்தான் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்மொழியில் அவர்கள் பல கலைகளைக்

கொடுத்துள்ளார்கள். அவற்றுள் வரியியல் எனப்படும் Palmistryஉம் ஒன்று. அங்கவியல் எனப்படும் சாமுத்திரிகா இலட்சணம் மற்றொன்று. பெயரியல் என்று பெயரை வைத்து யோகத்தினைக் கூறும் கலையும் ஒன்று. எண்ணியல் என்று எண்களை வைத்து என்னென்ன கணிப்புக்களைக் கூறமுடியுமோ அது Numerology என்னும் மற்றுமொன்று. அதுபோல மனையடி சாத்திறம் அல்லது மனையியல் உள்ளது. இப்படிப் பல சாத்திறங்களை, சித்தர்கள் வைத்திருக்கிறார்கள். 64 கலைகள், 32 கலைகள் என்று பல கலைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். அந்தக் கலைகளின் முழு வடிவம்தான் இந்துமதம் எனப்படும் சித்தர் நெறி.

இதை மனித வாழ்விற்கும் பயன்படுத்துவது என்பது எல்லோராலும் இயலாது. மிகப்பெரிய இயந்திரத்தை இயக்குவது என்பது அதைப் பற்றித் தெரிந்த பொறியியல் வல்லுனரால்தான் முடியும். அதுபோல சித்தர்களால்தான் இந்தக் கலைகளை மானுட வாழ்விற்கு முழு அளவில் பயன்படுத்தித் தரமுடியும். காலப் போக்கில் இந்த இந்துமதக் கலைகளை இயக்கித் தரக் கூடியவர்கள் இல்லாமல் போய் விடுகிறார்கள். பதினெண்சித்தர் பீடாதிபதிகளாகத் தோன்றுபவர்கள் இந்துமதத்தின் தந்தையாக அதாவது The Master of Induism, The Father of Induism என்ற நிலையில் இருப்பவர்கள். அவர்கள், இந்தக் கலைகளை இயக்குகிறார்கள்; மக்களுக்குப் பயன்படும்படிச் செய்கிறார்கள்.

இந்தப் பீடாதிபதிகள் இல்லாத காரணத்தால் அவ்வப்போது இந்தக் கலைகளில் தேக்க நிலைகள் (Stagnancy) ஏற்பட்டு அவற்றைப் பயன்படுத்த முடியாதபடிப் போய்விடுகின்றன. இதற்காகவே 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இம்மண்ணுலகின் ஆயுட்காலம் முழுமையும் தோன்ற நேரிடுகின்றது. இந்தக் காலக்கட்டத்தில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியுள்ள நான், என் காலத்தில் இந்த அறிவியல்களையும், கலைகளையும் எழுதித் தருகின்றேன், பயிற்சி கொடுக்கின்றேன், பலரையும் இக்கலைகளில் தயாரித்தும் வருகின்றேன்.

அப்படித் தயாரித்திருப்பதில் மனிதனுக்குரிய பெயர் மாற்றப்படுவதால் சில இராசிகளை, யோகங்களை மாற்றிட முடியும் என்கின்ற பெயரியல் என்ற கலையை மக்களுக்குப் பயன்படும் விதத்தில் வழங்கி வருகின்றேன் நான். பெயரில் உள்ள ஒவ்வொர் எழுத்திற்கும் ஓர் எண் உண்டு.

அதனைக் கொண்டு பெயர் இராசியைக் கண்டுபிடிக்கும் கலையைப் பயன்படுத்தி உனது பெயருடன் உன் வயது, உருவ அமைப்பு முதலியவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் உனது பெயர் சரியானதல்ல. 'ஜ' என்பது வடமொழிச் சொல். அதற்கு சித்தர்களின் தமிழ்மொழிச் சாத்திறத்தில் எண்ணிக்கை இல்லை. எனவே, உனக்குப் பயன் வேண்டும், வாழ்க்கையில் மாற்றம் வேண்டும் என்றால், பெயரை மாற்றிட வேண்டும்.

**பெயர் மாற்றம் எப்போது பயன் தரும்?**

'அரசினி' அல்லது 'இரசினி' என்று எழுதலாம். 'இரசினி' என்று பெயரை மாற்றி எழுதினால் அது இல்லற வாழ்க்கையைச் சிறப்புற அமைத்துத் தரும். அப்படியல்லாமல் அரசியல் ஆட்சி செய்யும் வாழ்க்கை, பெரிய பணக்கார வாழ்க்கை Commanding Life வேண்டுமென்றால் 'அரசினி' என்ற பெயர் மாற்றம் சரியானது. இப்படி மாற்றப்பட்ட பெயரை 1,50,000 (ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம்) தடவை எழுத வேண்டும். அப்படி எழுதினால் மாற்றங்களை நீங்கள் உடனே தெரிந்து கொள்ளலாம். பிறகு என்னோடு தொடர்பு வைத்துக் கொண்டு என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

உறுதியாக இது ஒரு விஞ்ஞானம்தான். It is a Science. So, you need not have to hesitate to test it. I have come forward to put all the facts and figures and the scientific truths. Each and everyone can come forward to perform the tests and find the results. Then they can accept my theory, policy or principle of Religion. You need not come to that extent to become a member of my party. Just you can be a patroniser of my party. That is enough; since, ladies cannot come forward to that extent. ஏனென்றால் பெண்களால் மிக அதிக அளவில் இயக்கத்தில் செயல்பட முடியும் என்று எதிர்பார்க்கப் படவில்லை. பெண்கள் பூசைகளைச் செய்து கொண்டிருந்தால் போதும். நாங்கள் பெண்களைப் பயன்படுத்திக் கொள்வது ஒரு குறிப்பிட்ட அளவுதான். நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, ‘அரசினி’ என்று எழுதினால் அது Political Administration; ‘இரசினி’ என்று எழுதினால் இல்லற வாழ்வு சிறப்பாக இருக்கும். ஓரளவு செல்வம் இருக்கும். இந்த மாற்றிய பெயரை ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் தடவை எழுத வேண்டும்.

## மானுட வாழ்வின் புரியாத நிலைகள்

6) அருளுலகத்தின் செல்லமகள் என்று அழைக்கப்படுகின்ற நீங்களே அருளுலகத்தின் நிலைகள் பற்றிச் சான்று தந்திருக்கிறீர்கள். அதாவது, தங்களுக்கு வந்த பல மாப்பிள்ளைகளுடைய வியாபார நிலை, வாழ்வியல் நிலை முதலியவைகளை யெல்லாம் பார்த்து பிடிக்கவில்லை என்று ஒதுக்கிக் கொண்டு வந்திருக்கிறீர்கள். பிறகு இப்பொழுது நீங்கள் ஒப்புக்கொண்டுள்ள மாப்பிள்ளை உங்களுக்குத் தெரிந்து பொருளாதாரத்தில் குறிப்பிடத் தக்க அளவு உங்களை விடப் பின் தங்கிய நிலையில் இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். அங்குச் சென்று அந்தப் பொருளாதாரச் சூழ்நிலையில் வசதி வாய்ப்புக்களை விட்டு விட்டு வாழ வேண்டியிருக்கும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இதெல்லாம் நன்றாகத் தெரிந்திருந்தும் உங்களுடைய சம்மதத்தை உங்களுடைய பெற்றோர்கள் கேட்டபோது எப்படி உங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்தீர்கள் என்பது உங்களுக்குத் தெரியவில்லை.

அதாவது, இந்த மாப்பிள்ளையைப் பார்த்ததும் திருமணம் செய்து கொள்ளுகிறேன் என்று ஒப்புக் கொண்டுவிட்டீர்கள். இது ஏன் என்று உங்களுக்கு நீங்களே கேள்வி கேட்டுக் கொண்டு பார்த்தாலும் அதற்குப் பதில் தெரியவில்லை உங்களுக்கு. இந்தப் பதில் தெரியாத நிலை - அதைத்தான் சித்தர்கள் சொல்லுகிறார்கள்; தெரியாத நிலை, அறியாத நிலை, புரியாத நிலை, அறிவுக்கு அப்பாற்பட்ட நிலை, ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட நிலை, காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட நிலை, தத்துவ விசாரணைகளுக்கு அப்பாற்பட்ட நிலை, ஏட்டுலகிலே இருக்கக் கூடிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளுக்கும், அறிவியல்களுக்கும் அப்பாற்பட்ட நிலை - இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது என்றால் அதற்குப் பெயர்தான் ‘தெய்வீக நிலை’.

இந்த தெய்வீக நிலையை விளக்கக் கூடிய நேரடி வாரிசுகள்தான் குருபீடங்கள் அல்லது குருதேவர்கள் அல்லது ஞானச்சாரியார்கள் அல்லது ஞானவேந்தர்கள் அல்லது ஞானபீடங்கள் - என்று சொல்லக் கூடிய பதினெண்சித்தர் பீடாதிபதிகள்; இந்துமதத் தந்தை என்று கூறத் தக்கவர்கள் நாங்கள். இங்கு அதைத்தான் விளக்குகிறோம். நீங்கள் ஏன் இந்த மாப்பிள்ளையை திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டீர்கள் என்று தெரியவில்லை உங்களுக்கு. அதற்குரிய விளக்கம்தான் இந்துமதம் - சித்தர் நெறி.

நீங்கள் ஏன் ஒப்புக் கொண்டீர்கள் என்பதை இப்போது நான் உங்களுக்கு விளக்கிச் சொல்லக் கூடாது. ஏனென்றால் உங்களுக்குத் திருமணம் நடக்கப் போகிறது. நீங்கள் பெண், திருமண நிலையைப் பற்றி நான் எதுவும் விமரிசிக்கக் கூடாது. திருமண ஏற்பாடுகள் அனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன. இது எங்களுடைய கருத்து என்று எதுவும் கூறுவதற்கில்லை. நாங்கள் பரிகாரமாகச் சொல்லக் கூடியதும் ஏற்கனவே கூறியபடி தங்களுடைய கணவரைக் குறைந்தது 4 வருடங்கள் உங்கள் வீட்டிலேயே தங்கித் தொழில் செய்யக் கூடியது மாதிரியான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்படி ஏற்படுத்திக் கொண்டால்தான் உங்களுடைய வாழ்க்கை நிலைகள் எல்லாம் சரியாக இருக்கும் என்று நாங்கள் ஆரம்பக் கட்டத்தில் கூறியபடியே கூறலாம். இப்பொழுது போய் நீங்கள் ஏன் இந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டீர்கள், எப்படி ஒப்புக் கொண்டீர்கள் என்றெல்லாம் விமரிசிப்பது நாகரிகமாகாது. உங்களுடைய நிலைக்கும் இது அப்பாற்பட்டது.

நாங்கள் எல்லாருடைய நிலையையும், எல்லாவற்றையும், எல்லாரிடமும் கூறிட முடியாது. நீங்கள் எங்களுக்கு ஆதரவாளர் என்ற நிலையில் இருக்கின்றீர்கள். அதோடு அருளுலகத்தின் செல்வமகள் என்றிருக்க வேண்டிய நிலையிலிருந்து அருளுலகத்தின் செல்ல மகள் என்ற நிலையில் இருக்கிறீர்கள். எனவே, உங்களுக்கு நாங்கள் அன்பின் காரணமாக இந்த விளக்கங்களை ஒரு குறிப்பிட்ட எல்லை வரைதான்

கூற முடியும். இதுதான் தெய்வீக நிலை. அந்த தெய்வீக நிலையை இதுதான் 'விதி', 'ஊழ்' என்று சிலபேர் சொல்லுவார்கள். இதிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்வது என்னவென்றால், நீங்கள் எவ்வளவுதான் அறிவாற்றல், முன்னெச்சரிக்கை உடையவராக இருந்தாலும் சரி, உங்களை மீறி சில செயல்கள் நடக்கும். அதுதான் தெய்வீக நிலை. இதனைக் குருவருளால்தான் மாற்றிக் கொள்ள முடியும்.

குருதேவர் உதவி எதற்குத் தேவை? குருவும் மனிதர்தானே, அவரால் என்ன செய்யமுடியும்? என்று நினைத்தால் அங்குதான் தவறு செய்கிறீர்கள். எல்லாக் கல்லும் கல்தான். ஆனால் மாணிக்கம் என்பது வேறு, வைரம் என்பது வேறு, வைடூரியம் என்பது வேறு, கோமேதகம் என்பது வேறு, பச்சை என்பது வேறு. இப்படி நவரத்தினக் கற்களிலேயே இத்தனை வகைகள் இருக்கின்றன. கருங்கல் என்று எடுத்து கொண்டாலும் அதிலும் எத்தனை வகை இருக்கின்றன. இதேபோல், மனிதர்கள் எல்லோரும் மனிதர்கள் அல்ல. இமயம் முதல் குமரி வரையிலும் பயணம் செய்திட்டவரும், பேரருளாளரும், முக்காலத்தைக் கணிக்க வல்லாரும் ஆன இராமலிங்க அடிகளார் தம் வாழ்க்கைக் காலத்தில் ஒரே ஒரு மனிதனைத்தான் பார்த்தேன் என்று எழுதுகிறார். இதன் பொருள் என்ன? மானுடர்களுள் மனிதர் வெகு சிலரே. விலங்குகளும், மிருகங்களும், பேய்களும், பிசாசுகளும்தான் மற்றையோர்.

**குருதேவர் சாதாரண மனிதர் அல்ல!**

## குருதேவர் யார் என்பதன் விளக்கம்

எனவே, குரு என்பது யார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் நீங்கள். இந்த உலகம் தோன்றிய 500 கோடி ஆண்டுகளிலேயே 12வதாகத் தோன்றியுள்ளவன் நான். எனவே, நான் ஒரு Rare Specimen. 48 சித்தர்களுக்கும், பதினெண்சித்தர்களுக்கும் பீடாதிபதி நான். இந்தப் பீடாதிபதி என்பவர்கள் 48 பேர்தான் 48 இலட்ச வருட கால வரையறைக்குள் தோன்றுவார்கள். அதிலும், 43 இலட்ச வருட காலம் இதுவரை சென்றுள்ளது; இதில் 12 பேர்தான் வந்துள்ளோம்.

இன்னும் உள்ள 4 இலட்சம் வருடங்களுக்குள் 36 பேர் தோன்றப் போகிறுர்கள். அதாவது இனி வரும் 4 இலட்ச வருடங்களும் மிக மோசமானவையாக இருக்கும். அதனுல்தான் நிறைய பீடாதிபதிகள் தோன்ற வேண்டியுள்ளது. நிறைய மருத்துவர்கள் உள்ளார்கள் என்றுல் நோயாளிகள் அதிகம் என்பது போல இது. மற்றவரால் முடியாதது குருதேவரால் எப்படி முடியும்? என்று கேட்க வேண்டாம். ஏனென்றுல், 500 கோடியாண்டுகளிலே 12வதாகத் தோன்றியுள்ள என்னுல் எல்லாமே முடியும். அதை அநுபவப் பூர்வமாகத்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## தாலியோகம் விளக்கமும், செயல்படுத்தும் விதமும்

7) அடுத்தாற்போல குருதேவரால் மட்டும் எப்படி *தாலிபாக்கியத்*தைக் கொண்டு உயிரைக் காப்பாற்ற முடியும் என்று கேட்டிருந்தீர்கள். அதற்கு **யோகம்** என்பதைப் பற்றி விளக்கம் வேண்டும். பிறப்பிலேயே வரும் யோகம் என்பது பற்றி நிறைய புத்தகங்கள் எழுதி உள்ளோம். யோகம் என்பது சிலருக்குத்தான் உண்டு. *'தாலியோகம்'* என்பதுதான் தமிழ்ச் சொல். மனைவிக்கு தாலியோகம் இருக்குமென்றுல், கணவனது ஆயுள் முடிந்து விட்டாலும் அவனுக்காக ஆயுசு ஓமம் செய்ய வேண்டியதில்லை. என்னைப் போன்ற குருதேவர் மனைவியின் தாலியோகத்தைக் கொண்டு கணவனின் ஆயுளை நிலைநிறுத்திட முடியும். அல்லது குருதேவரே இல்லையென்றுலும், அந்தத் தெய்வங்களை இவர்கள் வேண்டினுல், தெய்வீக அருளினுலும் பலிக்கும். மிகக் குறைவான யோகம் இருந்தால்தான் கணவன் உயிரோடு இருந்தாலும் படுத்த படுக்கையாகப் பெயரளவில் இருப்பான். அப்படிப்பட்ட வழக்குகள் எங்களிடம் நிறைய இருக்கின்றன. ஆனுல், மிகுந்த யோகம் இருப்பவர்கள் கடைசிவரை மிகச் சிறப்பாகக் கணவனோடு இருப்பார்கள். இந்தத் தாலியோகம் உடைய மனைவிகளுக்குத்தான் கணவரைக் காப்பாற்றித் தரமுடியும். தாலியோகம் இல்லையென்றுல் எதுவும் செய்ய முடியாது.

இந்த **யோகம்** என்பது என்னவென்றுல்; நிலத்திற்கடியில் நீரோட்டம் இருக்கிறது என்கிறோம். அந்த நீரோட்டத்திலும் உப்புத் தண்ணீர்

இருக்கிறது. உவர் தண்ணீர் இருக்கின்றது, நல்ல தண்ணீர் இருக்கிறது. அதுபோல கிணறு வெட்டுமிடங்களில் எல்லாம் தண்ணீர் கிடைப்பதில்லே. சில இடங்களில் 50 அல்லது 60 அடி வெட்டிஞலும் தண்ணீர் தென்படுவதில்லே. சில இடங்களில் சிறிது தூரம் வெட்டியவுடனேயே தண்ணீர் கிடைக்கிறது. அதேபோல, சிலர் ஆயுள் முழுவதும் பூசை செய்து பார்ப்பார்கள்; அருள் கிடைக்காது. சிலர் ஆறுமாதம்தான் கோயிலுக்குச் சென்று வருவார்கள்; அதற்குள் அருள் கிடைக்கலாம்.

நீங்கள் கேட்டுள்ளதிலேயே உள்ளது; பங்காரு அடிகளாருக்கு மட்டும் ஏன் அம்மன் சித்தியாகியது? இதை சிந்தித்துப் பாருங்கள், பராசத்தி ஏன் பங்காரு அடிகளாரின் மீது மட்டும் பாசம் கொண்டு சித்தியாஞள்? இந்தக் கேள்விக்கு விடைதான் **யோகம்** என்பது. அதாவது ஆதிபராசத்தியைப் பார்க்கும் யோகம் அளவுக்கு மிஞ்சி பங்காரு அடிகள் என்ற மனிதனிடம் இருந்தது. அதஞல், ஆதிபராசத்தி அவருக்குக் காட்சி அளித்தாள். எனவே, அவர் யோகியாக இருந்து அதைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். எல்லோருக்கும் யோகம் இருப்பதில்லேயே. யோகம் என்பது உள்ளதா? இல்லேயா? என்பதை இதிலிருந்துதான் புரிந்து கொள்ள வேண்டும். எப்படி பங்காரு அடிகளாருக்கு ஆதிபராசத்தியைப் பார்க்கும் யோகமிருந்து பார்த்தாரோ, அதுபோல ஒரு பெண்ணுக்குத் தன்னுடைய கணவனேக் கணவஞக வைத்துக் கொள்ளும் யோகம் இருந்தால்தான் கணவனேடு வாழமுடியும். ... ... ... ஒருவேளே யோகமே இல்லாவிடிலும் பீடாதிபதிகளால் அந்த யோகத்தை உண்டாக்கித் தரமுடியும். ... ... ... ... ஏதாவது ஒருவகையில் பரிகாரம் செய்து கொண்டேயாக வேண்டும். எனவே, அவர்களேயும் பூசை செய்யச் சொல்லி, நானும் பூசை செய்கின்றேன்.

**'யோகம்' என்பது என்ன?**

எந்தத் தனிமனிதருக்காகவும் நான் பூசை செய்வதில்லே. அருளுலகத்தின் மலர்ச்சிக்காகவும் அரும்பெரும் பணிகள் செய்ய வேண்டிய நிலேயில் உள்ளேன். எத்தனேயோ கருவறைகளேயும், கோயில்களேயும் புதுப்பிக்க வேண்டிய பணியில் உள்ளேன் நான். அது மட்டுமல்லாமல் நான்

கற்றது, கேட்டது, பயின்றது முதலிய அனைத்தையும் எழுதியேயாக வேண்டும். இவை தவிர உலகியலாகவும் நான் வாழ்ந்தாக வேண்டும்.

**குருதேவர் பிறருக்கு நன்மை செய்யும் முறை**

இவற்றிற்கிடையில் நான் ஒவ்வொருவருக்கும் நன்மை செய்து கொண்டிருக்க முடியாது. எனவே, அவரவருக்குரிய வழியைச் சொல்லி நீயே செய்து கொள் என்று கூறி விடுகின்றேன். மந்திறங்களைக் கூறி நீயே பயின்று கொள் என்று அவற்றை அச்சிட்டும் வெளியிட்டுள்ளேன். துப்பாக்கி உள்ளது என்றால் துடைத்து எண்ணெய் போட்டு சுத்தம் செய்து தோட்டாப் போட்டுச் சுட்டுப் பழகினால்தான் பயன்படும். அதுபோல, நான் தரும் மந்திறங்களை ஒன்றரை இலட்சம் தடவை கூறிப் பயிற்சி செய்து அதற்குரியவைகளைச் சித்தி செய்தால்தான் மந்திறங்கள் பயனாகும். அப்படிச் செய்யாமல் நான் வெளியிட்டுள்ள மந்திறங்களைக் குறை கூறிடக் கூடாது. ... ... ...

இப்படிப்பட்ட செயலை மனிதனால் செய்ய முடியுமா என்று கேட்டிருந்தீர்கள். இராமலிங்க அடிகள் காலத்தில் மனிதனைத் தம்மால் காணமுடியவில்லை என்று கூறியுள்ளார். அதேபோல் என் காலத்தில் ஒரே ஒரு மனிதனைக் கண்டுபிடித்து விட்டால் அனைத்தையும் அவனிடம் தந்து விடுவேன். மனிதனே இல்லை என்னும் போது, மனிதத் தன்மையே இல்லாதவர்களால் எப்படி எனது வலிமையைப் புரிந்து கொள்ள முடியும்?! நான் மனிதன் கூட அல்ல, Superman என்பதால் என்னால் செய்ய முடிகின்றது. இதை நான் என்ற அகந்தையில் கூறவில்லை. நான் செய்வதற்கெல்லாம் என் முன்னோர்கள் எழுதி வைத்துச் சென்றுள்ள வழிமுறைகள் இருக்கின்றன. ... ... .... இதில் நீங்கள் ஐயப்படத் தேவையில்லை.

செத்தாரை எழுப்புதலே முடியும் என்பதால், சாகப் போவதற்கு முன்பே தடுக்கவும் முடியும். இப்படிக் கூறுமிடத்து சாகப் போகும் அனைவரையும் காப்பாற்ற முடியுமா என்ற ஐயம் எழலாம். முடியும். ஆனால் தங்கம் எல்லா இடத்திலும் பூமிக்கடியில் கிடைப்பதில்லையே.

அதுபோல யோகம் உள்ளவர்களை மட்டும்தான் என்னால் காப்பாற்ற முடியும். யோகம் இல்லாதவர்களைக் காப்பாற்ற முடியாது.

... ... ... இதுபோல் எத்தனையோ பேர்களைக் காப்பாற்றியுள்ளேன். வீரமாகாளி சன்னிதானத்தில் நிறையப் பேர்களின் பட்டியல் உள்ளது.

**குருதேவரால் காப்பாற்றப் பட்ட ஒரு சிலர்**

அதன்மூலமும் தாங்கள் தெரிந்து கொள்ளலாம். இதனை வெறும் விளம்பரத்திற்காக இங்கே கூறவில்லை. கோவை மாவட்டத்தில் சிறுமுகையில் திருவள்ளுவர் நகரில் வசிக்கும் சித்தரடியான் ஒருவரின் மகளை மருத்துவத் துறையில் காப்பாற்ற முடியாது என்று கைவிட்டபின் என்னால் காப்பாற்றிக் கொடுக்கப் பட்டுள்ளாள். இன்று அவள் நன்கு நடமாடிக் கொண்டும், பள்ளிப் படிப்புப் படித்துக் கொண்டும் உள்ளாள். வேலூரில் பெரிய அரசுத் துறை நிறுவனத்தில் Divisional Manager ஆக உள்ளவரின் மகளையும் இதுபோலத்தான் வீரமாகாளிக்குத் தத்துக் கொடுத்து உயிரைக் காப்பாற்றி யிருக்கிறார்கள். இவர் நமது விண்வெளிச் சன்னிதானமாகவே உள்ளார். அண்மையில் 2, 3 மாதத்திற்கு முன்பு இவருடைய மனைவிக்கு (Breast Cancer) மார்பகப் புற்றுநோய் என்று கண்டுபிடித்து மார்பகத்தையே அறுத்து அகற்ற வேண்டும் என்று மருத்துவ வல்லுனர்கள் கூறிவிட்டனர். அறுவை சிகிச்சைக்கு நாள் குறித்தாகி விட்டது. அதன் பின்னர் “சித்தர் இருக்கும் போது இப்படி நடக்கலாமா?” என்று எண்ணி என்னிடம் தெரிவித்துப் பூசைகள் செய்து 15 நாட்களுக்குள் மீண்டும் பரிசோதித்துப் பார்த்ததில் X-Ray Reportஇல் உடலிற்கு ஒன்றுமில்லை என்று கூறிவிட்டார்கள். அறுவை மருத்துவமும் தேவையில்லை என்று முடிவு தெரிவித்து விட்டார்கள். இதை நீங்கள் நேரடியாகக் கேட்டு அறிந்து ஐயம் தெளியலாம்.

இதுபோல் தெய்வீகத்தின் மூலம் (Through Mystical Means) எதையும் குணப்படுத்தலாம். அப்படியென்றால், எல்லா நோய், துன்பங்களையும் போக்கலாமே என்றால், அந்த அளவிற்கு என்னுடைய சத்திகள் செலவாகும். பலருக்குத் தரும் அருட்சத்திகள் அள்ள அள்ளக் குறையாத ஒன்றல்ல. அந்தச் சத்திகளை மீண்டும் சேர்த்துக்

கொள்ள நான் பூசைகள் செய்தாக வேண்டும். ஏற்கனவே நான் 36 வயது வரை அரை நிர்வாணமாகவும், முக்கால் நிர்வாணமாகவும்,

**அருட்சத்திகளை அளவோடுதான் செலவிட வேண்டும்**

முழு நிர்வாணமாகவும் காடுகளிலும், மேடுகளிலும் அலைந்து திரிந்து வெய்யிலிலும், மழையிலும், பனியிலும் படாத பாடுபட்டு என்னென்ன பயிற்சிகளைச் செய்ய வேண்டுமோ அந்தந்த பயிற்சிகளைச் செய்து, முயற்சிகளைச் செய்து நான் அடைந்த பத்திநிலை, சத்திநிலை, சித்திநிலை, சித்து விளையாடல்நிலை போன்ற அருள்நிலைகளையும், சத்திகளையும் சேர்த்து வைத்து வீணாக்கிடாமல் வைத்திருக்கும் காரணத்தினாலும், அதை அளவாகச் செலவழிக்கின்ற காரணத்தினாலும்தான் என்னால் மக்களுக்கு நன்மை செய்ய முடிகிறது. இப்பொழுது என்னிடம் அருள் இருக்கிறது என்பதற்காகச் சித்து விளையாடல்களைச் செய்தால் Exhausting Conditions வந்து விடும். இது எப்படி என்றால்; 1962இல் திருவேற்காடு கருமாரி யம்மன் கோயில் யாராலும் கவனிக்கப்படாமல் கத்தாழைப் புதர் மண்டிக் கிடந்தது. திடீரென்று அதற்குக் கூட்டம் வர ஆரம்பித்து இன்று காரிலும், பேருந்துகளிலும் மக்கள் சென்று வழிபட ஆரம்பித்து விட்ட திருத்தலமாகி விட்டது. இதேபோலத்தான், மாங்காடு காமாட்சியம்மன் கோயிலும். இவற்றிற்குக் காரனம் எதுவோ அதுதான் யோக நிலையும், அருள்நிலையும்.

எனவே, பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய என்னால் உயிரைக் காப்பாற்றித் தரமுடியும். நூற்றுக்கும் மேற்பட்ட பட்டங்களை அருளுலகில் பெற்றுள்ள நான் மிகக் கடின உழைப்பால் பெற்ற அருட்சத்திகளினால்

**குருதேவர் யார் யாருக்கு நன்மை செய்கின்றார்?**

சிலருக்கு நன்மை செய்கின்றேன். அதுவும் அவர்கள் உயிர்த் தோழர்கள், உலக நன்மைக்காகப் பாடுபடக் கூடியவர்கள், இந்து மறுமலர்ச்சிக்காக எதையும் செய்யக் கூடியவர்கள் என்று தெரிவித்தால் மட்டுமே அவர்களுக்காக தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஒப்புதலோடு செய்து தருகின்றேன். அதுவும் இப்போது தேவதேவியின் ஒப்புதலோடும், அருளாட்சித் திருநகர் என்றால் மதுரை மீனாட்சி, தாத்தா மதுரைப் பாண்டி முனீசுவரர் ஆகியோரின் ஒப்புதலோடும் தான் பிறருக்கு

நன்மை செய்கின்றேன். என்ஞலும் எல்லோருக்கும் நன்மை செய்து விடமுடியாது. எனக்குக் கட்டுப்பாடுகள் உண்டு. நானும் நிறையப் பூசைகள் செய்து நிறைய சத்திகளை வளர்த்துக் கொண்டு பிறருக்கு ஏராளமாக நன்மையை செய்யலாம். ஆனுல், நான் வேலையில் இருப்பதால் எனக்கு அதற்குரிய ஓய்வு இல்லை. நான் முழுநேரமாக வந்து செயல்படுவதற்கேற்ப உலக நிலைகள் இல்லை. ஏனெனில், 36 வயது வரை நான் அதுபோல் முழுநேரமாக செயல்பட்டவன்தான். அதுவரை நான் பிறருக்குச் செய்த தொண்டுகள் யாவும் மக்களின் நன்றியில்லாத் தனத்திஞல் மறக்கடிக்கப் பட்டு விட்டன. அதஞல்தான், சில பேருக்கு மட்டும் தேர்ந்தெடுத்து நன்மை செய்கிறேன்.

## பங்காரு அடிகளாரும் குருதேவரின் இயக்கமும்

இப்படிப்பட்ட விளக்கங்களோடு என்னை ஒரு குருபீடமாகப் பார்த்துப் புரிந்து கொள்ளுங்கள். மனிதஞல் முடியாத செயல்கள் குருபீடத்தால் செய்யமுடியும். எனவே, நான் நேரில் வரும்போதும் மற்ற சமயங்களிலும் ஞானக்காட்சியில் என்னைப் பாருங்கள். உறுதியாக உங்களால் என்னைப் புரிந்து கொள்ள முடியும். என்னை யார் என்று எல்லாவிதச் சித்து விளையாடல் நிலைகளையும் காட்டக் கூடியவன் நான். நான் என்னை அதிகம் விளம்பரப் படுத்திக் கொள்ள விரும்பாதவன். அதஞல்தான் எனது எல்லா நிலைகளையும் காட்டாமல் அமைதியோடு இருக்கிறேன். ஒரே நேரத்தில் ஒன்றரை இலட்சம் இடங்களில் இருக்கக் கூடியவன் நான். பல செயல்களையும் உலகம் முழுதும் என்ஞல் செய்ய முடியும். அந்த ஆற்றல் அதிகம் இருப்பவர்கள்தான் அமைதியோடு இருப்பார்கள். நான் இந்த உலகத்திற்கு ஏன் வந்தேன்? என்ன செய்யப் போகிறேன்? என்பதை நான் இன்னும் எனக்கே தெளிவாக முடிவு கட்டிக் கொள்ளவில்லை. நான்தான் அருளாட்சி அமைக்கப் போகிறேன் என்று ஏட்டில் எழுதியிருந்தாலும் எனக்கு அதற்குரிய சூழ்நிலைகள் கிடைக்குமா என்பது தெரியவில்லை. எனவேதான் அமைதியோடு செயல்படுகிறேன்.

**குருபீடத்தை எப்படிப் புரிந்து கொள்வது?**

ஆனால், பங்காரு அடிகளார் இப்படி இல்லை. தம்மிடம் உள்ள ஆற்றலையும் சத்தியையும் கொண்டு தனக்குப் புகழ் சேர்க்கிறார்.

**பங்காரு அடிகளார் செயல்படும் விதம்**

பொருள் சேர்க்கிறார். அது அவருடைய விருப்பம். அவர் ஒரு பெரிய இயக்கமாகி இருக்கிறார். அதுதான் அவருடைய விருப்பமும், முறையும். அதை நான் ஒரு குறையாகக் கூறவில்லை. நாம் ஏன் அப்படி வளர விரும்பவில்லை என்றால் நம்மிடம் வருபவர்கள் நன்றியற்றவர்களாகப் போய் விடுகிறார்கள். இதையும் நீங்களே கூறியிருக்கிறீர்கள். பங்காரு அடிகளார் அப்படி இல்லை. வருபவர்களிடம் நன்றியிருக்கிறதோ இல்லையோ, பணத்தை வாங்கி விடுகிறார். அந்தப் பணத்தைக் கொண்டு கல்லூரிகள், பள்ளிக் கூடங்கள் கட்டுகிறார். மக்களுக்கு அள்ளித் தருகிறார். ஆனால், நானே வருபவர்களிடம் ஏழையாயிருந்தாலும், பணக்காரனாயிருந்தாலும் நீ என்னுடைய சீடனாக இரு. உலகத்திற்கு நன்மை செய் என்று கூறித் தயாரிக்கிறேன். சிலர் சிறிது தெரிந்து கொள்கிறார்கள். பயிற்சியும் பெறுகிறார்கள். ஆனால், காலப்போக்கில் ஏற்படும் உலகியல் சிக்கலில் சிக்கி என்னை விட்டு விலகி விடுகிறார்கள். பெரும்பாலானவர்கள் என்னால் நன்மையடைந்த பின்னால் விலகி விடுகிறார்கள். அதனால்தான் நான் இந்த இயக்கம் விளம்பரம் பெற்றதாக ஆகிட வேண்டாம்; என்னால் பலர் நன்மையடைந்தால் போதும் என்று நினைக்கிறேன்.

அடுத்ததாகப் பங்காரு அடிகளார் பெரிய இயக்கமாக நடத்தி வருகிறார். எண்ணற்றவர்களைப் பத்தர்களாகப் பெற்றிருக்கிறார். அவர்களுள் யாராவது ஒருவரால் பங்காரு அடிகளாரைப் போல் அருள்வாக்கு

**பங்காரு அடிகளார் இயக்கத்தின் போக்கு**

சொல்ல முடியுமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். மதுரை மீனாட்சியம்மன் கோயில் அவ்வளவு பெரிதாக இருக்கிறதே அதில் யாராவது ஒருவர் அருள்வந்து ஆடுகிறாரா? அதேசமயத்தில் மதுரைப் பாண்டிமுனீசுவரர் கோயிலில் பலர் அருளாடுகிறார்களே, அது ஏன்? இதைச் சிந்தித்துப் பார்த்தால்தான் அந்த வேறுபாடு உங்களுக்குத் தெரியும். வேறு எந்த மதத்திலாவது அருளாடுகிறார்களா இந்த உலகத்தில்? இந்துமதம் ஒன்றில்தான் இது முடியும்.

பங்காரு அடிகளார் ஊருக்கு ஊர் கிளைகள் ஆரம்பித்துள்ளார். அதிலெல்லாம் பெரிய பெரிய பணக்காரர்கள்தான் இருக்கிறார்கள். லயன் கிளப், ரோடரி கிளப் இருப்பது போல் பங்காரு அடிகளாரின் கிளைகள் பொழுது போக்கு மன்றங்களாகத்தானே (Recreation Clubs) இருக்கின்றன. வாராவாரம் கூடுவார்கள். அவர் எழுதித் தந்ததைப் படித்துப் பாடிப் பூசை செய்கிறார்கள். இதைத் தவிர வேறெதைச் செய்கிறார்கள்? பெறுகிறார்கள்? ஊருக்கு ஊர் ஆதிபராசத்தியின் பெயரால் 'கிளப்' (Clubs)தானே இருக்கின்றன.

**நமது இயக்கத்தின் ஆற்றலும் வலிமையும்**

நமது ஆட்கள் அப்படியில்லை. நான் எங்கெங்கு உண்டாக்கியிருக்கின்றேனோ அங்கெல்லாம் உள்ளவன் தன்னை உணர்ந்தவனாக இருக்கிறான். தனக்குள் அருளாற்றலை உண்டாக்கிக் கொள்ளக் கூடியவனாக இருக்கிறான். அடுத்தவனுக்கு அருளாற்றலைத் தரக்கூடியவனாகவும் இருக்கிறான். அது மட்டுமல்லாமல் தனது அருளாற்றலால் அடுத்தவனுக்கு ஊசிமுனையளவாவது நன்மை செய்யமுடியும் என்ற தைரியம் உள்ளவன் என் பின்னால் சிவப்பு வேட்டி, சிவப்புச் சட்டை அணிந்து இருக்கிறான். மெய்ஞ்ஞானக் கொடி, திரிசூலம், மயில்பீலி முதலியவை எடுத்துக் கொண்டு ஒருவன் செல்கின்றான் என்றால்; காற்று கருப்பினால் உடல்நலப் பாதிப்பு வந்தவன் ஒருவனுக்கு இவன் கண்ணை மூடி திருநீறு மந்திரித்துத் தந்தால் குணமாகும் என்று நம்பிக்கையுள்ளவன்தான் எனது சீடனாக இருக்கிறான். இது மாதிரி உள்ளவர்கள் பங்காரு அடிகளாரின் இயக்கத்தில் இருக்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னுடைய சீடன் ஒரு கோயிலுக்குச் சென்று கும்பிடுகிறான் என்றால் கண்ணீர் மல்கி அந்தக் கோயிலில் இன்னது உள்ளது என்று உணரத் தெரிந்தவனாகத்தான் உள்ளான். தெய்வீக சத்திகளை நமது இயக்கத்தவர்களால் உணர முடிகிறது. அதுதான் நமது இயக்கத்திற்கும், மற்ற இயக்கங்களுக்கும் உள்ள வேறுபாடு. இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் இருக்கும் அத்தனை பேரும் அருளாளர்களாக இருக்கிறார்கள். கலைஞர்களாக இருக்கிறார்கள். யாகம் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். சுடுகாட்டுக்குப் போய் பூசை செய்யக் கூடிவர்களாக இருக்கிறார்கள். பேய், பிசாசுகளைப் போக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

8) அதுமட்டுமல்ல பங்காரு அடிகளாருக்கு மொழி பற்றிய கவலையே இல்லை. மொழிப்பற்று, மொழியுணர்வு என்பதே அவருக்குக் கிடையாது. ஆனால், நமக்கு மொழிப்பற்று உண்டு. பங்காரு அடிகளாருக்கு இனப்பற்று பற்றிக் கவலையே இல்லை. ஆனால், நமக்குத் தமிழினம் என்ற இனப்பற்று உண்டு. பங்காரு அடிகளாருக்கு நாட்டைப் பற்றிக் கவலையே இல்லை. நாம் அப்படி யல்ல. தமிழ்நாடு என்ற ஒன்று தனிநாடாகவே இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் நமக்கு உண்டு. பங்காரு அடிகளாருக்கு வாழ்க்கையின் குறிக்கோள் எதுவுமில்லை. *வருபவர்களுக்கு மந்திரிக்க வேண்டும். அருள்வாக்குக் கூற வேண்டும். பணம், புகழ் சம்பாதிக்க வேண்டும். சுற்றுப்பயணங்கள் செய்ய வேண்டும்.* ... என்பனவற்றைத் தவிர வேறெதுவும் செய்ய நினைக்க வில்லை அவர்.

**பங்காரு அடிகளாரின் குறிக்கோள் அற்ற வெறுமை நிலை**

ஆனால், நானே அருட்புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறேன். மொழியின் அடிப்படையிலே, இனத்தின் அடிப்படையிலே, நாட்டின் அடிப்படையிலே தமிழ்நாடு உயர்ந்து நிற்கும். இந்தியாவிலுள்ள அத்தனை நாடுகளும் தனித்தனி நாடுகளாக இருக்கலாம். ஆனால், கூட்டாட்சி இருக்கும். United States of America என்றிருப்பது போல் United States of India என்றிருக்கும். ஒரு மாநிலத்தை மட்டும் மற்றவர்கள் சுரண்டுவது என்பது முடியாது. ஒரு மொழி மட்டும் மற்றவர்களை ஆதிக்கம் செய்வது தவறு என்பதை அருளுலகத்தின் மூலம் அறிவுரை கூறிடுவோம். ஏனெனில், சித்தர்கள் அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை என்ற நான்கினைத் தெளிவாகக் கூறி வருகிறார்கள். சித்தர்கள் எல்லாவற்றையும் தத்துவங்களாக எழுதி வைத்திருக்கிறார்கள். பங்காரு அடிகளார் என்ன தத்துவத்தை, அறிவுரையைப் புதிதாக மக்களுக்குக் கூறியுள்ளார் அல்லது எழுதி வைத்துள்ளார்?

நாங்கள் எங்களை **தத்துவ நாயகம்** என்றே கூறிக் கொள்கிறோம். எங்களின் தத்துவம் 500 கோடியாண்டுகள் பழமையானது. விண்ணையும், மண்ணையும் இணைக்கக் கூடிய தத்துவம். எதைப் பற்றிக் கேட்டாலும், அதற்கு விளக்கம் சொல்லமுடியும். அப்படிப்பட்ட மாபெரும் தத்துவத்தின்

நாயகம் யாம். ***பங்காரு அடிகளார் ஒரு சாதாரண சித்தியாளர்.*** அவரால் அருள்வாக்குக் கூறமுடியும் என்பதைத் தவிர தத்துவம் அல்லது அறிவுரை என எதுவும் கூறத் தெரியாது. **யாமோ புதிதாகத் தத்துவங்களை உண்டாக்கக் கூடிய, வழங்கக் கூடிய சித்தர்.** அதுமட்டுமல்ல, கல்லையும் புல்லையும் மண்ணையும் கடவுளாகும் ஆற்றல் படைத்தவர்கள் சித்தர்கள். அதாவது பங்காரு அடிகளாரின் காலில் விழுந்து என்னையும் ஓர் அருளாளனாக ஆக்குங்கள் என்றால் அவரால் அது இயலாது. தனக்குச் சமமான மற்றோர் அருளாளனை அவரால் உருவாக்க இயலாது. ஆனால், என் காலில் ஒருவன் விழுந்து தன்னையும் அருளாளனாக ஆக்க வேண்டும் என்று வேண்டினால் என்னால் செய்ய முடியும். அதுபோல் செய்து கொண்டும் இருக்கின்றேன்.

**தனக்குச் சமமான அருளாளர்களை உருவாக்குபவரே சித்தர்**

நான் உருவாக்கும் அருளாளர்கள் எந்த அளவு உண்மையும், பயிற்சியும், முயற்சியும் உடையவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவுக்குப் பயன் உண்டு. ஏனெனில், அதற்குரிய வழிமுறைகளையும், மந்திறங்களையும் அச்சடித்துக் கொடுத்துள்ளேன். என்னென்ன துறைகளைப் பற்றி என்னென்ன கருத்து வைத்துள்ளேன் நான் என்பதை 38 குருதேவர் அறிக்கைகளாக வெளியிட்டு விட்டேன். இன்னும் வெளியிட்டுக் கொண்டே உள்ளேன். என்னிடம் எவ்வளவு அறிவியல் சான்று இருக்கிறது, வளமான திட்டங்கள் உள்ளன என்பதற்கு இந்த அச்சிட்ட வெளியீடுகளும், நான் எழுதிக் குவித்துள்ள கோப்புக்களும் உள்ளன. தனிமனித வாழ்க்கைக்கு என்ன? அரசியல் வாழ்க்கைக்கு என்ன? குடும்ப வாழ்க்கைக்கு என்ன? சமுதாய வாழ்க்கைக்கு என்ன? மொழி வளர்ச்சிக்கு என்ன? பொருளாதார வளர்ச்சிக்கு என்ன? இந்தியத் துணைக் கண்டத்திற்கு என்ன? தமிழகத்திற்கு மட்டும் என்ன? என்பதற்கெல்லாம் தெளிவான திட்டங்கள் எம்மிடம் இருக்கின்றன. இவ்வளவு திட்டங்கள் இருக்கும் காரணத்தால்தான் எம்மால் பங்காரு அடிகளார் போல் வளர இயலவில்லை.

எம்மிடம் தெளிவான கொள்கை இருப்பதால் அரசியல்வாதிகள் எம்மை வளர விடுவதில்லை. மதத்துறையில் இருந்து வரும் மடாதிபதிகள், ஆச்சாரியார்கள், பீடாதிபதிகள் போன்றோர் எம்மை வளர விடுவதில்லை.

**தீய முதலாளித்துவ வாதிகள் மெய்யான சமத்துவ வாதியான சித்தரை இயக்கமாக வளர விடுவதில்லே**

இன்றைய பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் போன்ரூேர் இலக்கியத் துறையில் எம்மை வளர விடுவதில்லே. கோயிலில் இருப்பவர்கள் எல்லாம் எம்மை கோயிலுக்குள்ளேயே வர விடுவதில்லே. ஆனுல், இவர்கள் எல்லாரும் பங்காரு அடிகளாரை வளர விடாமல் தடுப்பது இல்லே. ஏனென்ருல் அவரால் ஆபத்து இல்லே. நான் வளர்ந்தேன் என்ருல், இந்த நாட்டின் அரசியல்வாதிகள் வளரமுடியாது. மடாதிபதிகள், ஆச்சாரியார்கள் போன்ரூேர் வளரமுடியாது; இலக்கியவாதிகள் வளரமுடியாது. புதியதொரு தத்துவம்; ஆனுல், இந்த நாட்டிற்குச் சொந்தமான பழம்பெரும் தத்துவத்தினே நான் சொல்லுகிறேன். இந்த நாட்டின் வரலாறைச் சொல்லுகிறேன். தத்துவத்தையும் அதற்குரிய செயல்நிலேயையும் சொல்லி வருகிறேன், செய்து காட்டுகிறேன் என்கின்ற போது இந்த நாட்டில் எல்லோருமே பயப்படுகிருர்கள்.

இதைவிட முக்கியமானதாக இந்த நாட்டின் படித்த, வேலேபார்க்கும் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கும் இளேஞர்கள் என் பின்ஞல் நூற்றுக் கணக்கில் இருக்கிருர்கள். என் பின்ஞல் இருப்பவர்கள் தத்தம் சொந்தக் காலில் நிற்பவர்களாகவே இருக்கிருர்கள். இந்த இயக்கத்தை வைத்து அல்லது அருட்கலேகளே வைத்துப் பணம் சம்பாதிப்பவர்கள் இல்லவே இல்லே. அப்படியொரு நிலே இருக்கும் காரணத்திஞல்தான் எமது இயக்கம் வளர முடியவில்லே. இதை வைத்துப் பிழைக்கலாம். வார வழிபாட்டு மன்றம் ஆங்காங்கே ஆரம்பித்துச் சந்தா சேர்த்து வாழலாம் என்ற நிலே அனுமதிக்கப் படுமேயாஞல் இது வளர்ந்து விடும்.

**வியாபார ரீதியான வளர்ச்சியே பங்காரு அடிகளாருடையது**

பங்காரு அடிகளார் வார வழிபாட்டு மன்றங்கள் திறந்து நடத்திக் கொண்டிருப்பதற்கும், நாம் அ.வி.தி. நிலேயம் அமைப்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன. நமது அ.வி.தி. நிலேயத்தில் பேயாளிகளும், நோயாளிகளும்தான் வருகின்றனர். நாம் நோய்களேயும், பேய்களேயும்தான் சந்திக்கிரூேம். ஆஞல், அங்கே வார வழிபாட்டு மன்றத்தில் பெரிய பெரிய பணக்காரர்களும், நல்ல நிலேயில் இருப்பவர்களும்தான் வருகின்றனர்.

அங்கே ஒரு வியாபாரமே நடக்கிறது. அதனால், அது Recreation Club போல், மனமகிழ் மன்றம் போல் வளர்ந்து கொண்டே இருக்கும். நமது அ.வி.தி. நிலையத்தில் நோயாளிகளும், பேயாளிகளும் நலம் வேண்டி வருகின்றனர். நோயும், பேயும் குணமானவுடன் மீண்டும் இந்த மருத்துவமனைக்கு வரமாட்டார்கள். ஆனால், மனமகிழ் மன்றத்திற்கு வரும் கூட்டம் தான் பங்காரு அடிகளாரின் பின்னால் இருக்கின்றது. எம்மிடம் வரும் கூட்டம் தம்மிடமுள்ள நோயும், பேயும் நீங்கியவுடன் மீண்டும் வருவதில்லை. அது அவர்கள் தவறல்ல. நான் அவர்களைக் குறை கூற மாட்டேன். எனவேதான் இயக்கம் வளரவில்லை.

இவ்வளவு பெரிய விளக்கம் சிறு பெண்ணாகிய உன் பொருட்டுக் கூறப்படுவதன் காரணம் இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரையாக உருவெடுக்க வேண்டும் என்பதால்தான். கடந்த நான்கு நாட்களாகக் கடுமையான சுற்றுப்பயணமாகச் சேலம் மாவட்டச் சுற்றுப்பயணம் செய்து வந்துள்ளேன். சுற்றுப்பயணத்தில் காட்டிலும், மேட்டிலும், குகையிலும், கோயிலிலும் பூசைகள் செய்து ஏராளமானோர்களுக்கு மந்திரித்து, நேரம் தவறி சாப்பாடு சாப்பிட்டு, நள்ளிரவுகளைக் கடந்து விழித்திருந்து செயல்பட்டதனால் ஏற்பட்ட களைப்பையும் மறந்து உனது அறிவுப்பூர்வமான சந்தேகங்களுக்கு விளக்கம் தந்து விட வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக உடனடியாக Walkman Cassette Recorder மூலம் உனது கேள்விகளுக்கான பதில் விளக்கங்களை cassetteஇல் பதிவு செய்து வைக்கிறோம். கூடிய விரைவில் இங்குள்ள எமது பணியாளர்களுள் ஒருவரான இளந்துறவி சுந்தரானந்தா இந்த cassette பதிவை ஒரு கட்டுரையாக வடித்து அனுப்பிடுவார். யாம் நேரில் வருகையில் இந்த cassetteஐ கொண்டு வந்து தந்து கேட்கத் தருகிறோம்.

**இந்த விளக்கங்கள் அனைவருக்கும் என வழங்கப் பட்டவை**

இந்த விளக்கங்கள் உனக்கு மட்டும் என்று கூறப்பட வில்லை. உன் மூலம் பலருக்கும் கருத்து விளக்கம் கொடுத்தாற்போல் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. எனவே, இக்கடிதத்தைப் பலருக்கும் படித்துக் காட்டிடு. எனது இந்தக் கருத்து விளக்கங்களில் ஏதேனும் கருத்து

மாறுபாடோ, ஐயங்களோ இருந்தால் நீ கேட்கலாம். அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். நீ எதற்காகவும் வருத்தம் அடையத் தேவையில்லை. பரிகாரங்கள் ஏதேனும் தேவை என்று விரும்பினால் அப்படிப்பட்ட பரிகாரங்களை சொல்லிடுகிறேன். அதை நானே செய்து தரவும் தயாராக உள்ளேன். ஏனென்றால், நீ அருளுலகைப் பொறுத்தவரை செல்வமகளாக இருந்து இப்போது செல்லமகளாக இருக்கிறாய். உனக்குக் கிடைத்த ஞானக்காட்சியை வீணாக்கிட வேண்டாம். பல பயிற்சிகளையும் செய்து பார். உனக்குத் தேவையான விளக்கங்களை கேட்டுக் கொள்ளலாம். நீ படித்தவள் என்பதால் நான் வெளியிட்டுள்ள புத்தகங்கள் தேவை என்றால் எழுது. உடனே அனுப்பி வைக்கிறோம்.

## பலி கொடுப்பது பற்றிய விளக்கம்

உனது கேள்விகளில் உணவுக்காக நாம் அசைவம் சாப்பிடுவது வேறு; ஆனால் பலி கொடுப்பதை ஏற்க முடியவில்லை என்று கூறியுள்ளாய். உணவுக்காக அறுக்கப்படும் உயிர்களுக்கு அந்த உயிர் என்னவாகும் என்பதை யாரும் கூற இயலாது. அதுதான் நியாயப்படி பாவம். ஆனால், நாங்கள் பலி என்று கொடுக்கப்படும் உயிர்கள் உடனே வேறு பிறப்பெடுப்பதற்கும், மேம்பாடுடைய நிலைகளைப் பெறுவதற்கும் உத்திரவாதம் உண்டு. நரபலிகள் கூட உண்டு என்றாலும், 13 வயதிலேயே கபாலிக மத குருவாக நான் ஏற்கப்பட்ட போதிலும், நான் நரபலிகளை ஏற்பதில்லை. இந்தப் பலி என்பது உயிரினங்களை விடுவிக்கக் கூடிய ஒன்று. **யாகத்தில் பலி கொடுக்கப்பட்டால் அந்த உயிர் நிச்சயமாக மேன்மையான நிலைகளையே அடையும். மிகச் சிறந்த பிறப்புக்களைப் பெறும்.** அந்த உயிர்களை விடுவிக்கிறோம் என்றே கூறலாம். இந்தப் பலி கொடுப்பது பற்றிக் குருபாரம்பரியத்தில் நிறைய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

புத்தர் கொல்லாமையைக் கூறியுள்ளாரே என்று கேட்டீர்கள். புத்தர் மதத்தில் இன்றைக்கு இறைச்சி உண்ணாமல் இல்லை. ஆனால், இந்தக் கொல்லாமை, அதாவது பலியிடல் தவறு என்பது புத்தர் என்ற தனியொருவரின் கருத்து. தனிப்பட்ட மனிதர்களின் கருத்திற்கு நாம் இடம் தருகிறோம். புத்தர் தனிமனிதராக இருந்து தாம் சிந்தித்த

கருத்தைக் கூறினார். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் கூட கறி சாப்பிடக் கூடாது என்று தம் கருத்தைக் கூறினார். அவர் நமது தாத்தாதான் என்றாலும், நாம் இந்தக் கருத்தை ஏற்க முடியுமா? முடியாது. புத்தர் என்பது ஒரு நிலைதான். பத்தர், பத்தியார், போத்தர், போத்தியார், புத்தர், புத்தியார், முத்தர், முத்தியார், சீவன்முத்தர், சீவன்முத்தியார், உருவசித்தியார், அருவசித்தியார், அருவுருவ சித்தியார் என்று பதின்மூன்று நிலைகள் உள்ளன. அதனால், புத்தரும், சித்தரும் ஒன்றல்ல. சித்தர்கள் உண்டாக்கிய நிலைகளில் புத்தர் என்பது ஒரு நிலை. புத்தர்கள் என்பவர்கள் இன்னும் பல பிறப்புக்களை எடுத்தாக வேண்டும். அதனால், புத்தர் சொன்னார் என்பதற்கு இங்கே இடமேயில்லை. புத்தர் அன்பை போதித்து பலி கொடுத்தலை மறுத்தார் என்றால்; அவர் ஆரியர்களைக் கண்டித்துச் செயல்பட்டிருக்கிறார். ஆரியர்களின் முறைகளைக் கண்டித்திருக்கிறார். ஆனால், தமிழர்களை, திராவிடர்களை அவர் கண்டித்தார் என்று கூற இடமேயில்லை. புத்தருக்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஆரியர்கள் தடுமாறினார்கள் என்பதுதான் நடந்த நிகழ்ச்சி.

தாத்தா இராமலிங்க அடிகளாரே இன்று வந்தால் அவரைக் கறி சாப்பிட வைப்பேன். இன்னும் சொல்லப் போனால் யாகத்தில் அவரை அழைத்து குருதிப் பலி கொடுத்துத்தான் அருள் பெற வேண்டும். இராமலிங்க அடிகளாருக்குச் சிலை வைப்பதென்றால் குருதிப் பலி கொடுத்து இரத்தம் சிந்தித்தான்; அவரைப் புத்துயிர்ப்புச் செய்வதென்றாலும்; ஏன், உங்கள் வீட்டிற்கு ஒரு தாயத்து, தகடு, முடிகயிறு கொடுப்பதென்றாலும் பலி கொடுத்துத்தான் செய்ய முடியும். ஒரு பேயை ஓட்ட வேண்டும், அல்லது ஒரு பிசாசை ஓட்ட வேண்டும் என்றாலும் பலி கொடுத்துத்தான் செய்ய வேண்டும். ஒரு புதுவீட்டில் குடிபுகுவதென்றாலும் கிடா வெட்டிப் பலிகொடுப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இன்றியமையாத ஒன்று. எனவே, இதில் அருவருப்பு அடைவதற்கோ, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதற்கோ இடமேயில்லை. பலி கொடுப்பது தவறு என்று சொல்வதெல்லாம் பொருளற்றது. அநுபவமில்லாதவர்கள் கூறக் கூடியது. பலிக்குப் பொருள் உண்டு. பலி கொடுத்துத்தான் தீர வேண்டும்.

**குருதிப் பலி கொடுக்க வேண்டியதன் அவசியம்**

அருளுலகத்தில் செல்வ மகளாக இருந்து இன்று செல்ல மகள் என்ற நிலையில் இருக்கக் கூடிய இரசினி என்ற பெயரில் இருக்கும் தாங்கள் தங்களுடைய பெயரை 'தேவி அரசினி' என்று எழுதிக் கொண்டு வந்தால் அதற்குச் சில பயன்கள் உண்டு. அதேமாதிரி 'இரசினி தேவி' என்று எழுதிக் கொண்டு வந்தால் அதற்குச் சில பயன்கள் உண்டு. 'இரசினி தேவி' என்று எழுதுவது பொருளுலகத்திற்கும், 'தேவி அரசினி' என்று எழுதுவது அருளுலகத்திற்கும் உரியதாக இருக்கும். உங்களுக்கு எது விருப்பமோ அதைத் தேர்ந்தெடுத்து நீங்கள் எழுதிக் கொள்ளலாம். இப்படி நாங்கள் பரிகாரத்தைச் சொல்லுவோம். உங்கள் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்ளலாம்.

தங்கள் ஐயங்கள் அனைத்திற்கும் உரிய விளக்கங்கள் தரப்பட்டு விட்டன. தங்களைப் போல் ஐயங்கள், வினக்கள் மனதில் உடைய அனைவருக்கும் பொதுவாகத் தரப்பட்ட விளக்கங்கள் இவை. எனவே, இந்த cassette பலருக்கும் போட்டுக் கேட்கத் தரப்படும். ஏனென்றல் இன்றைய சூழ்நிலையில் யாருக்கும் படித்துப் புரிந்து கொள்ளப் பொறுமை இல்லை. எனவே, அப்படிப்பட்டவர்கள் தங்கள் கேள்வித்திறன் மூலமே புரிந்து கொள்வதற்காகவே இது cassette ஆகவே பாதுகாக்கப் படுகிறது.

அதே நேரத்தில் தங்களுக்காக நான் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் எமது பணியாளர் மூலம் எழுதி தங்களுக்கு அனுப்பக் கூறியுள்ளேன். நானே, அமர்ந்து தங்களுக்கான பதிலை எழுதிட எனக்கு ஓய்வில்லாத காரணத்தால் cassetteஇல் பதிவு செய்துள்ளேன். எனது விளக்கங்களை தாங்களும் எளிமையான மொழிநடையில் பதிலைத் தர வேண்டும் என்று கேட்டிருந்தீர்கள். என்னுடைய மொழிநடையைத் தங்களால் புரிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. இதற்காகவே கருத்துக்களை நான் கூறிட எமது பணியாளர் தங்களுக்காக எளிய மொழிநடையைப் பின்பற்றி பதில் எழுதி யனுப்புகிறர். என்னுடைய மொழிநடை ஆழமானதாக இருக்கும். ஆழமானது மட்டும் இல்லாமல் இரண்டு மூன்று பொருளுடையதாக உடைய சொற்களைக் கையாண்டிருப்பேன். அப்படிப்பட்ட எனது மொழிநடையைப் படித்து நீங்கள் வேறெரு பொருளைப் புரிந்து கொண்டு விட்டால் குழப்பம்

வந்து விடும். அல்லது நான் எதிர்பார்த்த பொருள் உங்களுக்குக் கிடைக்காமல் போய்விடக் கூடாது. அதனால் தான் நானே, உங்களுக்கு பதில் எழுதவில்லை. அதற்காக நீங்கள் வருந்தக் கூடாது. இரு நாட்களாக இரவு 10 மணிக்கு மேல் தங்களுடைய ஐயங்களுக்கான பதிலை சோர்வினையும், அயர்வையும், களைப்பினையும் பொருட்படுத்தாமல் கூறி ஒரு மணிநேரப் பேச்சாக cassette tapeஇல் பதிவு செய்யப் பட்டுள்ளது. எனவே, உங்கள் கடிதத்திற்கு மிகுந்த முதன்மை கொடுத்துள்ளோம்.

இதற்கு மேல் தங்களுக்கு எழும் ஐயங்களை துரை வீட்டாரிடம் கேட்டுத் தெளிவு பெறலாம். துரை வீட்டார் என்னை நன்கு புரிந்தவர்கள். எங்கள் இருவரின் இணைப்புக்கும், பிணைப்புக்குமிடையே தாங்கள் இருந்து வருகிறீர்கள் என்பதால் தங்களுக்கு எழும் ஐயங்களைத் தீர்க்க வேண்டியது எனது கடமை என்று கூறி இந்த அஞ்சலை முடிவு செய்கிறேன்.

## அருளுரையும் அறிவுரையும் வழங்கியவர்:

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

குருதேவர் ஆணைப்படி ஒலி நாடாவில் குருதேவர் வழங்கிய விளக்கங்களைப் பதிவு செய்து; பின் அதனைக் கேட்டு தாளில் எழுதிய ஓலைநாயகம்: இளந்துறவி சுந்தரானந்தா.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் பா.மோகன், சித்தரடியான் க.இராசேந்திரன் ஆகிய இருவரின் கையெழுத்தில் இருந்தது.//**



**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசான பிற்காலச் சோழப்பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**

**சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் குருதேவர் அமைத்த சித்தர் கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.**



Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar and the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்)
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609
Printed at Kavin Printers, Madurai

**www.gurudevar.org Email: indhuism@gmail.com**